**கவனிக்க.-** *27.07.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1770 - 2012 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2012.08.03

*1770 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1200 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2012, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தற் கட்டளைச்சட்டம்*

***6 (சி) 1 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்***

*இதன் கீழ் காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நபர்கள் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள களரிகளை 2012 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்காக 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் கட்டளைச்சட்டத்தின் கீழ் 6 (சி) 1 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.*

*இத்தகைய உரிமம் அந்தக்களரி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிகளுக்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் அன்னாரின் ஆட்சேபனைக்கான காரணங்கள் பற்றிய எழுத்து மூலமான கூற்றொன்றினை இவ்வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் திகதியில் இருந்து நான்கு வாரங்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

*செ. பிரணவநாதன்,*
*மாநகர ஆணையாளர்,*
*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2012.07.10.*

| இல. | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா, முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கும் மனைத்தளம் |
|---|---|---|---|---|
| 1 | ஏ. ஏ. ஜான்ஸ்டின் 68, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் | செயலாளர் | செவண்லெவன் பொழுதுபோக்கு விளையாட்டு | இல. 66, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் |

*8-76*

---

**கங்க இஹல கோரளை பிரதேச சபை**

முன்னேற்றமடைந்த பிரதேசங்களாகப் பிரகடனம் செய்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 134 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கங்க இஹல கோறளை பிரதேச சபையின் 2012, பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபைக்கூட்டத்தில் தீர்மான இலக்கம் 04 (01) இன் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் பிரேரணை, குறித்த சட்டமூலத்தின் உபவிதிகளுக்கமையப் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், கண்டி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி டி. வத்சலா மாரம்பகேயினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.*

*ஆர். பி. குணரத்ன ராஜபக்ஸ,*
*தலைவர்,*
*கங்க இஹல கோரளை பிரதேச சபை.*

*கங்க இஹலகோறளை பிரதேச சபை அலுவலகம்,*
*குருந்துவத்த,*
*2012.06.19.*

**பிரேரணை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 134 ஆவது பிரிவின் (10 ஆவது உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கங்க இஹல கோறளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களை முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும்,*

*2. ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கான அங்கீகாரத்தைக் கண்டி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கங்க இஹல கோறளை பிரதேச சபை இத்தால் முன்மொழிகின்றது.*

**அட்டவணை**

*01. எத்கால பிரதேசத்தில் கம்பளை நாவலபிட்டிய பிரதான வீதியில் ஜயமாலபுர 06 ஆவது ஒழுங்கையில் திரு. ஜயசுந்தர என்பவரது சில்லறைக் கடையிலிருந்து நாவலபிட்டிய வீதியில் நாவலபிட்டிய நோக்கிய சார்க் குடியிருப்பைக் கடந்து ரணசிங்ஹ கொமியுனிகேஷன் கடை வரையுள்ள இருபுறங்களிலும் 300 மீற்றர் தூரமுள்ள பிரதேசம்.*

*02. குருந்துவத்த பிரதேசத்தில் கம்பொல சிங்ஹபிட்டிய தொலொஸ்பாகே வீதியில் சிங்ஹபிட்டிய சந்தியில் முதலாம் மைல்கல் அருகில் திரு. ஆனந்த என்பவரது சில்லறைக் கடை அருகிலிருந்து குருந்துவத்த நகரைத் தாண்டி தொலொஸ்பாகே வீதியில் உடஹேன்தன்ன லோகானந்த விகாரைக்குத் திரும்பும் பாதையிலிருந்து உடஹேன்தன்ன அஞ்சலகம் வரை அமைந்துள்ள பாதையின் இருபுறங்களிலும் 300 மீற்றர் தூரமுள்ள பிரதேசம்.*

*03. குருந்துவத்த நகரில் பிரதேச சபை அலுவலகத்திலிருந்து பெல்லேபிட்டிய பாதையில் பெல்லேபிட்டிய நோக்கிய வீதியில் 01 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள திரு. ஆர். பீ. அல்விஸ் என்பவரது வீட்டுக்குச் செல்லும் நுழைவாயில் வரையுள்ள பிரதேசத்தின் இருபுறங்களிலும் 300 மீற்றர் தூரமுள்ள பிரதேசம்.*

*04. குருந்துவத்த நகர மத்தியில் பிரதேச சபை அலுவலகத்திலிருந்து கிராஉல்ல வீதியில் 'தென்ன' வைத் தாண்டி, எதிரிலுள்ள திரு. எச். எஸ். விஜேசேக்கர என்பவரது வீட்டின் எதிர்ப்புறத்தில் உள்ள பாதை வரை 01 கி. மீ. தூரமுள்ள இருபுறங்களிலும் 300 மீற்றர் பிரதேசம்.*

*05. குருந்துவத்த நகர மத்தியில் பிரதேச சபை அலுவலகத்திலிருந்து மீதலாவ பாதையில் 01 கி. மீ. தூரத்தில் திரு. கே. பீ. ஆரியசிங்ஹ என்பவரது வர்த்தக நிலையம் வரையுள்ள இருபுறங்களிலும் 300 மீற்றர் தூரமுள்ள பிரதேசம்.*

(பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசங்கள்)


Assesment tax Area Map - Ganga Ihala Korale Pradeshiya Sabha
Existing Area
Proposed Area. [300m towards from center line]
Thembiligala
Warakawa
Godaganna
Gampolawela
Wallahagoda
Harakola
Bowatura
Galaaya
Thellhunna
Halagama
Thembirigala
Pallegama
Jayamalpura
Polmalagama
Ethgalagama
Sinhapura
Ulapane North
Rajaelawatta
Ulapanewatta Colony
Ulapane South
Kaluwala
Pellapitiya South
Wetakedeniya
Uduwella
Malgollawatta
Deligalawatta
Kellwatta
Kellwatta
Alugolla
Udahenwala
Lewdeniy
Doloswala
St. Ketherinwatta
Kabaragala
Railway
Contour
Boundary
Divisional Secretariat Office
Pradeshiya Sabha
Hospital
School
Police Station
Agrarian Service Centre
Post Office
Sub Post Office
Railway Station
Buddhist Temple
Hindu Temple
Mosque
Trigonometrical Station
Main Road - A Class
Main Road - B Class
Minor Road
Jeep or Cart Track
Paddy
River
Forest
Rock
Tank

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை - 2012**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 03.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.07.2012 |
| | | வெள்ளி | 10.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.07.2012 |
| | | வெள்ளி | 17.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.08.2012 |
| | | வெள்ளி | 24.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.08.2012 |
| | | வியாழன் | 30.08.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.08.2012 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 07.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.08.2012 |
| | | வெள்ளி | 14.09.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.08.2012 |
| | | வெள்ளி | 21.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.09.2012 |
| | | வெள்ளி | 28.09.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.09.2012 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 05.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.09.2012 |
| | | வெள்ளி | 12.10.2012 | .. | நண்பகல் 12 | வியாழன் | 28.09.2012 |
| | | வெள்ளி | 19.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2012 |
| | | வியாழன் | 25.10.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2012 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.